**செ. கு. எண்: 33** நாள்: 28.02.2011

# மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை 2011–2012

## முதலமைச்சர் கலைஞர் கருத்து.

மத்திய நிதியமைச்சர் திரு ப்ரணாப் முகர்ஜி அவர்கள் இந்தியாவின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இந்த 2011–2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை வகுத்துள்ளார். பலதரப்பு மக்களும் பயன்படத்தக்க வகையில் தீட்டப்பட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டத்தை வகுக்க அவருக்கு வழிகாட்டியுள்ள பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. மன்மோகன் சிங் அவர்களையும், மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களையும் பாராட்டுகிறேன்.

உலகஅளவிலான பொருளாதார தேக்க நிலையின் பாதிப்பு இந்திய பொருளாதாரத்தை அதிக அளவில் தாக்காதவண்ணம் பல சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஒரு சீரான வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லக் கூடியதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

முதன்மைத் துறைகளில் முக்கியமான துறையான விவசாயத் துறையின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், விளைப் பொருட்களின் சேதாரத்தைக் குறைக்கவும், உணவுப் பதப்படுத்துவதை ஊக்குவிக்கவும், விவசாயப் பணிகளுக்கு கடனுதவி தடையின்றி கிடைக்கவும் பல்வேறு சிறப்பான திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை வளர்சித்திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை ரூபாய் 6755 கோடியிலிருந்து 7860 கோடியாக உயர்த்தியும், 60 ஆயிரம் கிராமங்களில் பருப்பு வகைகள் பயிரிடுவதை ஊக்குவிக்க ரூபாய் 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், ரூபாய் 300 கோடி செலவில் 60 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் எண்ணெய் பனைப் பயிர்களை பயிரிடுவதற்கான திட்டத்தினை அறிவித்துள்ளதும், காய்கறிகள் உற்பத்தியை ஊக்குவிக்க ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்தும், வறட்சிப் பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்த, கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற பயிர்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்த ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது போன்ற பல்வேறு திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கது என்றாலும் ஒதுக்கீடு செய்துள்ள தொகை இந்திய நாட்டின் அளவில் போதாது என்பதால், இந்தத் தொகை மேலும் உயர்த்தப்படலாம் என்று எண்ணுகிறேன்.

விவசாயப் பொருட்களின் விலையேற்றம் உள்ள இந்த நேரத்தில், இந்தத் திட்டங்களால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டு உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு

**உதவியாக இருக்கும். மேலும் விவசாயிகளுக்கான பயிர்க் கடன் ரூபாய் 3.75 இலட்சம் கோடியிலிருந்து ரூபாய் 4.75 இலட்சம் கோடியாக உயர்த்தியுள்ளதும் முறையாக கடனை திருப்பிச் செலுத்துபவர்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த வட்டிச் சலுகையை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்த்தியுள்ளதும் பாராட்டத்தக்க அம்சங்களாகும். தமிழக அரசு முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடனை வழங்கி வந்தாலும் மத்திய அரசின் பயிர் கடனுக்கான இச்சலுகையை வரவேற்கிறேன்.**

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நபார்டு வங்கியின் மூலம் ரூபாய் 3000 கோடி நிதி உதவி வழங்குவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இச்சலுகையினால் கடனைத் திரும்பச் செலுத்த இயலாத கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு விடிவு காலம் ஏற்படும்.**

**மேலும், நபார்டு வங்கியின் மூலம் வழங்கப்படும் ஊரக அடிப்படை வசதி கட்டமைப்பு மேம்பாட்டுத் (RIDF XVII) திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூபாய் 16 ஆயிரம் கோடியிலிருந்து ரூபாய் 18 ஆயிரம் கோடியாக உயர்த்தி, சேமிப்புக் கிட்டங்கி வசதியை மேம்படுத்துவதற்காக இந்தக் கூடுதல் நிதி வழங்கியுள்ளது, விவசாயப் பொருட்கள் முறையாக சேமிக்கப்பட்டு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். மேலும் 15 பெரிய அளவிலான உணவைப் பதப்படுத்தும் பூங்காக்கள், குளிர்சாதன வசதிக்கான திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் மற்றும் தீவனப் பயிர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்கள் போன்றவை முதன்மைத் துறையான விவசாய, கால்நடைத் துறைகளின் வளர்ச்சிக்கு குறிப்பாக கிராமப்புற வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.**

**தொழிற்சாலைகளின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு 23.3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது பாராட்டத்தக்க ஒன்றாகும். தனியார் நிறுவனங்களுடன் இணைந்து உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்க ஒன்று. மேலும், உள்கட்டமைப்பு வசதிகளின் முதலீட்டை அதிகரிக்க ரூபாய் 30 ஆயிரம் கோடி அளவிற்கு வரிச்சலுகை பெற்ற கடன் பத்திரங்கள் அரசு வழங்க உள்ளதாக தெரிவித்திருப்பது இத்துறையில் முதலீட்டை அதிகரிக்க உதவும்.**

**நகர்ப்புறத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் வீட்டுவசதி மேம்பாட்டினை தமிழக அரசு ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது மத்திய அரசு அறிவித்துள்ள ஒரு சதவீதம் வட்டிச் சலுகை மற்றும் ராஜீவ் நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் அடமான மீட்பு நிதி போன்றவற்றால் ஏழைகள் பயன்பெறும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களை மாநில அரசுகள் விரைவாகச் செயல்படுத்த இயலும்.**

சமூக நலத் திட்டங்களுக்காக மத்திய அரசின் ஒதுக்கீடு இந்த ஆண்டு 17 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்காக 36.4 சதவீதம் மொத்த திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டத்தக்க ஒன்று. அங்கன்வாடி பணியாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும் சம்பளம் இரட்டிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல் ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களுக்கும் முதன்முறையாக ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புகளுக்கு கல்வி உதவித் தொகை இந்த ஆண்டு முதல்முறையாக வழங்கப்பட உள்ளது போன்றவை வரவேற்கத்தக்க ஒன்று. கல்வித் திட்டங்களுக்காக குறிப்பாக சர்வ சிக்ஷா அபயன் திட்டத்திற்காக சென்ற ஆண்டைக் காட்டிலும் 40 சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, கல்வி வளர்ச்சிக் குறியீடுகளை மாநிலங்கள் விரைவாக எட்டுவதற்கு மிக உதவியாக இருக்கும். மக்கள் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு 20 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க ஒன்று. முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான வயதுத் தகுதி 65 லிருந்து 60 ஆக குறைக்கப்பட்டுள்ளதும், 80 வயதிற்கு மேற்பட்டுள்ளவர்களுக்கு உதவித் தொகை ரூபாய் 200 லிருந்து ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளதையும் வரவேற்கிறேன்.

வரிச் சலுகையைப் பொறுத்தவரை தனிநபர் வருமான வரிவிலக்கு உச்சவரம்பு ரூபாய் 1.60 இலட்சத்திலிருந்து ரூபாய் 1.80 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. வயது முதிர்ந்தோருக்கான சலுகை பெறும் அதிகபட்ச வயது 65 லிருந்து 60 ஆக குறைக்கப்பட்டுள்ளதும், அவர்களுக்கான வருமான உச்சவரம்பு ரூபாய் 2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதும், தனிநபர்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கும் என நம்புகிறேன். மேலும் 80 வயதைக் கடந்த முதியோருக்காக ஒரு புதிய வகுப்பு உருவாக்கப்பட்டு அவர்களுக்கான வருமான உச்சவரம்பு ரூபாய் 5 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது.

தமிழக அரசின் நெடுநாளைய கோரிக்கையான ஜாதிவாரி கணக்கெடுப்பை வரும் ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை நடத்த இருப்பதாக அறிவித்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. இதற்காக எனது நன்றியினை மத்திய அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

* * *

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.